# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.2438/C/2024

திரு மு. முருகேசன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்,
வனப்பாதுகாவலர் அலுவலகம்,
வனத்துறை தலைமையிடம், .. பொது அதிகார அமைப்பு
வேளச்சேரி முதன்மை சாலை,
கிண்டி, சென்னை - 600 032.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 03.10.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 18.12.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 26.02.2023 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு மு. முருகேசன் என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி மா. சுமதி, ஆராய்ச்சி அலுவலர், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) அலுவலகம், வனத்துறை தலைமையிடம், கிண்டி, சென்னை என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை, கிண்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், சென்னை முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்திலிருந்து சேலம் மண்டல வனப்பாதுகாவலருக்கு அனுப்பி வைக்கப்பட்ட சேலம் வனக்கோட்டம் மற்றும் மேட்டூர் மண்வளப்பாதுகாப்பு திட்ட கோட்டங்களில் முதன்மை தலைமை வனப்பாதுகாவலரால் கடந்த 2013-2014-ஆம் ஆண்டு முதல்

2015-2016-ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு மேற்கொள்ளப்பட்ட உள்துறைத் தணிக்கைக் குறிப்புகளில் நகல்கள் மற்றும் அவை அனுப்பி வைக்கப்பட்ட முதன்மைதலைமை வனப்பாதுகாவலரது கடிதங்களின் நகல்கள், முதன்மை தலைமை வனப்பாதுகாவலருக்கு கடந்த 14.12.2022 அன்று தேதியிட்டு அனுப்பப்பட்ட புகார் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 8 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.ஆர்டிஐ/28587/2023 நாள் 04.03.2024 மற்றும் ந.க.எண்.ஆர்டிஐ/28587/2023 நாள் 12.12.2024 ஆகிய தேதிகளிட்டு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், மேற்படி, தனது மனுவில் கோரியுள்ள இனம்-2, இனம்-3 மற்றும் இனம்-4 ஆகியவற்றிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும் அத்தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

*6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என இவ்வாணையம் கருதுகிறது. எனவே, பொதுத்தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-*

- *மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய இனம்-2, இனம்-3 மற்றும் இனம்-4 ஆகியவற்றிற்குரிய தகவல்களை முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.*

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.2438/C/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்,
வனப்பாதுகாவலர் அலுவலகம்,
வனத்துறை தலைமையிடம்,
வேளச்சேரி முதன்மை சாலை,
கிண்டி, சென்னை - 600 032.

**<u>வழக்கு எண்.SA.2438/C/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு மு. முருகேசன்,
எண்.3/163, ஜமீன் எளம்பள்ளி ரோடு,
திடுமல் (ம) அஞ்சல், கபிலர்மலை வழி,
பரமத்தி வேலூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் - 637 204.

Copy to: File
SNPS / 16.04.2026